தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

ஆனி 24, பிரஜோற்பத்தி — திருவள்ளுவர் ஆண்டு 2022

1991 ஜூலை 8, திங்கட்கிழமை

Chief Reporter Tamil Nadu Legislative Assembly Secretariat 12 OCT 1991 Madras-600 009

மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. இரா. முத்தையா அவர்கள் தலைமையில் 9-30 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

'' குணம்நாடிக் குற்றமும் நாடி அவற்றுள்
மிகைநாடி மிக்க கொளல் ''.

ஒருவருடைய குணங்களை ஆராய்ந்து, பிறகு குற்றங்களையும் ஆராய்ந்து, மிகுதியானவை எவை என ஆராய்ந்து, எது மிகுந்துள்ளதோ, அதிலிருந்து அவனது இயல்புகளை அறிந்திட வேண்டும்.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி* இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்

1. 4-7-1991ஆம் நாளன்று ஆளுநர் அவையில் உரையாற்றத் தொடங்கியபோது நடைபெற்ற விரும்பத்தகாத சம்பவங்கள் தொடர்பாக ஓர் உறுப்பினரைப் பேரவைப் பணிகளினின்றும் தற்காலிக நீக்கம் செய்த நாட்களைக் குறைத்துப் பேரவைத் தலைவர் அளித்த தீர்ப்பு.

மாண்புமிகு செல்வி ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இம்மாதம் 4 ஆம் நாள் ஆளுநர் உரையின் போது, இப்பேரவையில் நிகழ்ந்துவிட்ட விரும்பத்தகாத கண்டனத்திற்குரிய சம்பவத்தை அடுத்து, திரு. பண்ருட்டி ச. இராமச்சந்திரன் அவர்கள் இப்பேரவையில் இருந்து 3 நாட்களுக்கு நீக்கி வைக்கப்பட்டுள்ளதாகத் தாங்கள் அறிவித்தீர்கள். அந்த 3 நாட்களில் ஒரு நாள் ஏற்கனவே முடிந்துவிட்டது. திரு. பண்ருட்டி ச. இராமச்சந்திரன் அவர்களைப் பொறுத்தவரையில் அந்த நடவடிக்கையே போதுமானது என்று நாங்கள் கருதுகிறோம். எனவே திரு. பண்ருட்டி ச. இராமச்சந்திரன் அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட தண்டனையின் கடுமையைக் குறைக்க வேண்டும் என்று பல்வேறு தரப்பினரிடமிருந்து வந்துள்ள வேண்டுகோளுக்கு இணங்க, மீதித் தண்டனையை ரத்துச்செய்து, இன்று முதல் அவர் மீண்டும் அவைக்கு வரலாம் என்று அறிவிக்குமாறு தங்களை அன்புடன் வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய வேண்டுகோளையும், இந்த அவை உறுப்பினர்கள் பல்வேறுபட்டவர்களுடைய பொதுக்கருத்துக்களையும் அறிந்த வகையில், மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய வேண்டுகோள் ஏற்றுக்கொள்ளக் கூடியது என்று நான் கருதுகிறேன். எனவே திரு. பண்ருட்டி ச. இராமச்சந்திரன் அவர்களுக்கு வழங்கிய தண்டனை—

1. 4—7—1991 ஆம் நாளன்று ஆளுநர் அவையில் உரையாற்றத் தொடங்கியபோது நடைபெற்ற விரும்பத்தகாத சம்பவங்கள் தொடர்பாக ஓர் உறுப்பினரை பேரவைப் பணிகளின்றும் தற்காலிக நீக்கம் செய்த நாட்களைக் குறைத்துப் பேரவைத் தலைவர் அளித்த தீர்ப்பு

ஏற்கனவே நான் தண்டனை வழங்கி அன்று கொடுத்த அந்த ஒரு நாள், அவையிலிருந்து நீக்கப்பட்ட அந்தத் தண்டனை போதும் என்று கருதி இன்று முதல் திரு. பண்ருட்டி ச. இராமச்சந்திரனுக்கு அளிக்கப்பட்ட தண்டனையை ரத்துச் செய்து திரு. ச. பண்ருட்டி இராமச்சந்திரன் மீண்டும் அவைக்கு வரலாம் என்று தீர்ப்பு வழங்குகிறேன். (குறுக்கீடுகள்) இதிலே எதுவும் வேண்டாம்.

டாக்டர் தே. குமாரதாஸ் : தலைவர் அவர்களே . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதிலே எதுவும் வேண்டாம்.

டாக்டர் தே. குமாரதாஸ் : நீங்கள் வழங்கிய தீர்ப்புக்கு நன்றி. அதே நேரத்தில். . . .

2. அறிவிப்பு

மாற்றுத் தலைவர்கள் பட்டியல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்போது பேரவைக்கு ஓர் அறிவிப்பைச் செய்ய இருக்கிறேன்.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 9, உள்விதி 1-ன் கீழ் கீழ்க்கண்ட உறுப்பினர்களை இப்பேரவையின் முதல் கூட்டத் தொடரின் மாற்றுத் தலைவர்களாக (Panel of Chairmen) நியமிக்கிறேன்.

1. திரு. க. அர்ச்சுனன்.
2. திரு. வ. சத்தியமூர்த்தி.
3. திருமதி ரமணி நல்லதம்பி.
4. டாக்டர் தே. குமாரதாஸ்.

3. விதி 110இன் கீழ் முதலமைச்சரின் அறிக்கை

பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் உண்ணாவிரதம் இருப்பது தொடர்பாக நடைபெற்ற வன்முறைச் சம்பவங்கள் மற்றும் நடவடிக்கைகள் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை விதி 110-இன் கீழ் மாண்புமிகு முதல்வர் அவர்கள் இப்போது பேரவைக்கு ஓர் அறிக்கையை அளிப்பார்கள்.